ஆதி கிரேக்க மெய்யியலாளர் பைதகரசின் மனித நல்வாழ்க்கைக்கானவழிகாட்டல்கள் - ஒரு சமகால நோக்கு

மாரிமுத்து பிரகாஷன்

மெய்யியல் சிரேஷ்ட விரிவுரையாளர்

மெய்யியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

சோக்கிரடீசிற்கு முந்தைய மெய்யியலாளர்கள் மரபில் பைதகரஸ் முக்கியமான இடத்தினை பெறுகின்றார். இந்த ஆய்வுக்கட்டுரையானது எவ்வாறு ஆதிகிரேக்ககால மெய்யியலாளர் பைதகரசின் வழிகாட்டல்கள் சமகால வாழ்க்கை முறைக்கு பொருத்தமான வகையில் பயன்படுத்தப்பட முடியும் என்ற தேடலை மேற்கொள்வதாக உள்ளது. பைதகரஸ் பொதுவாக கணிதம், மெய்யியல் முதலான துறைகளில் மேற்கொண்ட பங்களிப்புக்காக அறியப்படுகின்றார். மெய்யியலின் பௌதீக அதீத சிந்தனையுடன் ஒழுக்கவியலை இணைத்து இவ்வுலக வாழ்க்கையில் உடல், உள ஆரோக்கியத்துடன், ஆன்ம மேம்பாடு கொண்ட வாழ்க்கைக்கான வழிகாட்டலை மேற்கொள்வதாக இவருடைய சிந்தனைகள் உள்ளன. குறித்த புராதன வழிகாட்டல்களின் சமகால பொருத்தப்பாட்டுத்தன்மை எவ்வாறு உள்ளது என்பதே இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான பிரச்சினையாக அமைந்துள்ளது. இதன்படி இதனடிப்படையில் வாழும் கலையுடன் தொடர்புடைய வகையில் பைதகரசின் அடிப்படையான கொள்கைகள் எவை?, எவ்வாறு பைதகரசும் அவருடைய சீடர்களும் குறித்த கொள்கைகளை தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்றினார்கள்?, எவ்வாறு குறித்த கொள்கைகள் சமகால வாழ்க்கை முறைக்குள் வாழ்க்கை நலனையும், ஒழுக்க நடத்தையினையும் மேம்படுத்துவதற்காக உள்வாங்கப்பட முடியும்?, பைதசரசின் தத்துவார்த்த, ஆன்மீக கொள்கைகளும், நடைமுறைகளும் சமகாலத்தில் ஒருங்கிணைந்த நல்வாழ்க்கைக்கு எவ்வாறு பங்களிப்பு செய்யக்கூடியவையாக உள்ளன? என்பன இந்த ஆய்வினை முன்நகர்த்தும் வினாக்களாக அமைந்துள்ளன. பௌதீகஅதீத தளத்தில் கட்டமைக்கப்பட்ட ஒழுக்க வழிகாட்டல் சமகால வாழ்க்கையில் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்பதனை ஆய்வு செய்வது இங்கு இலக்காக அமைந்துள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்பு சார்ததாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பைதகரசின் தத்துவங்களை வெளிப்படுத்தும் மூலநூல்களும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் இதன்பொருட்டு வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக புராதன மூலங்களில் நவீன வாழ்க்கைக்காக உள்ள படிப்பினைகளை மீள்பரிசீலனை செய்யும் ஒரு செயற்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள்: பைதகரஸ், வாழும் கலை, புராதன மெய்யியல், நல்வாழ்க்கை

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR

அறிமுகம்

அயோனிய பிராந்தியத்தில் மிலிட்டசுக்கு அருகில் இருந்த சாமோஸ் (Samos) எனும் தீவில் கி.மு ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பைதகரஸ் (Pythagoras - கி.மு 582 - 500) மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்குரிய தனித்துவமான வழிமுறையொன்றினை கட்டமைத்து அதனை போதித்து தனக்கானதொரு சீடர் பரம்பரையினை உருவாக்கிய வகையில் முக்கியத்துவமுடையவராக அமைகின்றார். புராதன கிரேக்க மெய்யியலில் மிகவும் முக்கியமான ஒரு பங்களிப்பாளரான இவர் கணிதம், இசை, அண்டவியல் என்பவற்றுடன் வாழ்க்கை தொடர்பில் ஆன்மீக அணுகுமுறைகள் என்பவற்றிற்காக பரவலாக அறியப்படுகின்றார். இவர் நிறுவிய தத்துவார்த்த, மற்றும் ஆன்மீக வாழ்க்கை முறை பைதகரசிய வாழ்க்கை முறை என்று தற்போது அறியப்படுகின்றது. பிரபஞ்சத்தை நுண்மையாக எண்களின் அடிப்படையில் புரிந்துகொள்ளுதல், இயற்கையுடன் இசைந்த வகையில் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்தல் என்பன இவருடைய வழிகாட்டல்களில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவருடைய பங்களிப்புக்கள் மெய்யியல், விஞ்ஞானம், கலை என பல துறைகளில் செல்வாக்குடையனவாக உள்ளன. குறிப்பாக நல்வாழ்க்கை வாழ்வதற்கான வழிகாட்டல்களை முன்வைக்கின்ற 'வாழும் கலை' தொடர்பான சிந்தனைகளில் மிகுந்த செல்வாக்கினை சமகாலத்திலும் கொண்டிருக்கின்றன.

மெய்யியலை கொள்கைரீதியானது மற்றும் செயற்பாட்டுரீதியானது என இரண்டு தளங்களில் காண்கின்ற இவர் செயற்பாட்டுத்தன்மையுடையதற்கே முன்னுரிமை வழங்குகின்றார். குறிப்பாக 'மனிதர்களது வாழ்க்கையினை உயர்த்துவதற்குரிய பங்களிப்பினை வழங்குவதாக தத்துவம் இருக்க வேண்டும்' என்பது இவரது பிரதானமான நிலைப்பாடாக உள்ளது. இதனை 'மனிதர்களது உடலில் இருந்து நோயினை நீக்காத எந்த மருந்தும் எவ்வாறு பயனற்றதாகின்றதோ அவ்வாறே மனித ஆன்மாவில் இருந்து தீமையினை விலக்காத தத்துவமும் பயனற்றதாகும்' என்று குறிப்பிடுகின்றார். இவருடைய மெய்யியல் பங்களிப்புக்களை கேத்திரகணிதம் மற்றும் பௌதீக அதீதம் சார்ந்த விடயங்களுடனும் ஆன்மாவின் அழிவற்ற தன்மை, மறுபிறப்பு, தாவர உணவின் முக்கியத்துவம், கொல்லாமை, ஏனைய உயிரினங்களை அன்பாக நடாத்துதல், கூட்டுவாழ்க்கை, இசையின் முக்கியத்துவம், இலக்கங்களின் முக்கியத்துவம், கேத்திரகணிதம் என பல விடயங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மெய்யியலுடன் கணிதத்தை இணைத்து செயற்பாடுகளை மேற்கொண்ட முதலாவது சிந்தனையாளராக வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகின்றார். வாழும் கலை என்பது நூற்றாண்டுகள் கடந்த ஒரு தேடலாகும், இதில் ஒரு மனிதன் தனக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்க்கையினை எவ்வாறு சிறந்த வகையில் வாழ முடியும் என்பது கவனத்தில் கொள்ளப்படுகின்றது. சமகாலத்தில் மனிதர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ள நிலையில் பைதகரசின் ஞானம் ஒரு சமநிலையான, இணக்கமான, ஒழுக்கமான, முன்னேற்றமான வாழ்க்கையினை வாழ்வதற்கு வாய்ப்பினை வழங்கக்கூடியவையாக உள்ளன. இந்த ஆய்வானது நவீன சமூகத்தில் ஒரு அர்த்தமுடைய, நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு எவ்வாறு பைதகரசின் கொள்கைகள் பயன்படுத்தப்பட முடியும் என்பதனை ஆய்வு செய்து வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஆய்வுப் பிரச்சினை, ஆய்வு வினாக்கள், ஆய்வு முறையியல்

பைதகரசிய மெய்யியலின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்திற்கு மத்தியில் நவீன வாழ்க்கைக்கு அதனுடைய பிரயோகம் எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பது தொடர்பில் ஒரு சிக்கல்நிலை உள்ளது. பல்வேறு ஆராய்ச்சிகள் அவருடைய கணித, விஞ்ஞான பங்களிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக உள்ள நிலையில் அவருடைய ஒழுக்கவியல் மற்றும் வாழ்க்கை நெறிமுறைகள் தொடர்பான சிந்தனைகள் பெருமளவில் அறியப்படாதவையாகவே உள்ளன. இந்த

பின்னணியிலேயே குறித்த இந்த ஆய்வானது எவ்வாறு பைதகரசின் கொள்கைகள் சமகால நடைமுறை வாழ்க்கைக்குள் எவ்வாறு உள்வாங்கப்பட முடியும், அதன் ஊடாக எவ்வாறு ஒழுக்கரீதியான நல்வாழ்க்கையினை வாழ முடியும் என்பதனை ஆராய்ந்து வெளிப்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் வாழும் கலையுடன் தொடர்புடைய வகையில் பைதகரசின் அடிப்படையான கொள்கைகள் எவை?, எவ்வாறு பைதகரசும் அவருடைய சீடர்களும் குறித்த கொள்கைகளை தங்களுடைய வாழ்க்கையில் பின்பற்றினார்கள்?, எவ்வாறு குறித்த கொள்கைகள் சமகால வாழ்க்கை முறைக்குள் வாழ்க்கை நலனையும், ஒழுக்க நடத்தையினையும் மேம்படுத்துவதற்காக உள்வாங்கப்பட முடியும்?, பைதசரசின் தத்துவார்த்த, ஆன்மீக கொள்கைகளும், நடைமுறைகளும் சமகாலத்தில் ஒருங்கிணைந்த நல்வாழ்க்கைக்கு எவ்வாறு பங்களிப்பு செய்யக்கூடியவையாக உள்ளன? முதலான ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்பு சார்ந்ததாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது வரலாற்றுப் பகுப்பாய்வு, சமகால விளக்க முன்வைப்புக்கள் என்பன கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இலக்கிய மீளாய்வின் பொருட்டு பைதகரசின் மூலநூல்கள் வாசிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. நல்லிணக்கம், ஒழுக்கநல்வாழ்க்கை, ஆன்ம – உடல் - உள ஒருங்கிணைவு, நல்லொழுக்கம் முதலான எண்ணக்கருக்கள் பைதகரசிய சிந்தனையில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக மனித வரலாற்றின் ஆரம்பத்தில், புராதன மூலங்களில் ஒன்றில் இருந்து சமகால வாழ்க்கைக்கு பொருத்தமான ஒரு வழிகாட்டலை எடுத்துக்கொள்வதற்குரிய வாய்ப்பு தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பது சிறப்பான விடயமாக அமைகின்றது.

பைதகரசிய மெய்யியல் - அறிமுகம்

மெய்யியல் (Philosophy) என்ற பெயரினை 'ஞானத்தின் மீதான விருப்பும் ஏக்கமும்' (A longing and love of wisdom) என்ற அர்த்தத்தில் முதன்முதலில் பயன்படுத்தியவராகவும் தன்னை ஒரு ஞானி என்று அல்லாமல் 'ஞானத்தின் மீது விருப்பு கொண்டவர்' என்ற அடிப்படையில் மெய்யியலாளன் (Philosopher) என்று அழைத்துக்கொண்டவராகவும், இறைவனைத்தவிர வேறு யாரும் ஞானமுடையவர்களாக இருக்க முடியாது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தவராகவும் பைதகரஸ் குறிப்பிடப்படுகின்றார் (Gill, & Pellegrin, 2006).

பைதகரசின் பௌதீகஅதீத, அண்டவியல் நம்பிக்கைகள் இந்த பிரபஞ்சம் அடிப்படையில் எண்களின் ஒழுங்கினால் புரிந்துகொள்ளப்படக்கூடிய ஒரு ஒழுங்கமைப்பில் உள்ளது என்பதனை மையமாகக் கொண்டுள்ளது. எண்சார்ந்த உறவுமுறையினால் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன, இந்த பிணைப்பே இந்த பிரபஞ்சம் குறித்த ஒரு ஒழுங்கில் இயங்குவதற்கு காரணமாக உள்ளது. 'அனைத்தும் எண்களே' என்ற அவடைய வலியுறுத்தல் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இந்த எண்சார்ந்த இணக்கத்தை புரிந்துகொள்வது ஒருவர் பிரபஞ்சத்துடன் இசைவான வகையில் வாழ்வதற்கு அடிப்படையாக உள்ளது என்பது பைதகரசினதும், அவரை பின்பற்றியவர்களதும் நம்பிக்கையாக உள்ளது. பைதகரசிய அண்டவியல் கொள்கையில் நல்லிணக்கம் என்பது மிகவும் முக்கியமான ஒரு எண்ணக்கருவாக உள்ளது. உதாரணமாக இசை என்பது மிகவும் எளிமையான அதேவேளையில் நுணுக்கமான வகையில் ஒன்றினைகின்ற எண்களது விகிதாசாரமாகும். அதுபோலவே இந்த பிரபஞ்சமும் குறிப்பிட்ட விகிதாசார அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பிரபஞ்ச ஆற்றல்கள் குறிப்பிட்ட விகிதத்தில் இணைந்து பிரபஞ்சத்தின் ஒழுங்கினை நிலைநிறுத்தியுள்ளன. இந்த

ஆற்றல்களுடன் ஒருவர் தன்னை இணைத்துக்கொள்வதன் ஊடாக நிர்ணயகரமான, நிறைவான வாழ்க்கையினை வாழ முடியும் என்பது பைதகரசின் நிலைப்பாடாக உள்ளது(Gottlieb, 2016, & Barnes, 1982).

இவ்வாறு பிரபஞ்ச ஆற்றலுடன் இசைவான வகையில் வாழ்வதே ஒழுக்கமான, இணக்கமான வாழ்க்கையாக பைதகரசிய ஒழுக்கவியலில் விளக்கப்படுகின்றது. குறித்த விடயங்கள் தொடர்பான ஞானத்தெளிவு, நடுநிலையாக அவற்றினை பின்பற்றுதல், சுயகட்டுப்பாடு முதலானவை இவருடைய ஒழுக்க மெய்யியலின் மத்தியமான அம்சங்களாக உள்ளன. இந்த ஒழுக்க வாழ்க்கை ஒருவர் தனக்கும், பிரபஞ்சத்திற்கும் இணக்கமாக வாழ்வதற்கு அவசியமாக உள்ளது. சுயகட்டுப்பாடு என்பது ஒருவர் தன்னுடைய விருப்பார்வங்களை கட்டுப்படுத்திக்கொள்வதற்கு இன்றியமையாததாக உள்ளது. அதீதத்தையும், குறைபாட்டினையும் விலக்கி நடுநிலையான வகையில் வாழ்வதற்கு இந்த சுயகட்டுப்பாடு பயனுடையதாக உள்ளது. இதன் ஊடாக தனிப்பட்டவர்களுடைய நல்வாழ்க்கை ஒழுங்குமுறைக்குள் இருக்கின்றபோது பிரபஞ்ச ஒழுங்கும் சரியாக நிர்வகிக்கப்படுவதாக இருக்கும். இதற்குரிய வகையிலேயே பைதகரசிய வாழ்க்கை முறை விருத்தி செய்யப்பட்டுள்ளது.

பைதகரசிய வாழ்க்கை முறை – பகுப்பாய்வு

பிளேட்டோ தன்னுடைய குடியரசு (*Republic*) நூலின் பத்தாவது அத்தியாயத்தில் இடம்பெறும் 600b கூற்றில் பைதகரஸ் தன்னை பின்பற்றியவர்களுக்கு மிகவும் அற்புதமான வாழ்க்கை முறை பற்றிய போதனைகளை பரிசாக வழங்கியிருந்தார். இந்த 'பைதகரசிய வாழ்க்கை' அவர்கள் ஏனைய மனிதர்களிலும் இருந்து வேறாக, தனித்துவமாக வாழ்வதற்கு உதவியது' என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றினை ஆன்மா மற்றும் நல்வாழ்க்கை தொடர்பான பைதகரசிய வழிகாட்டல்கள் என்று குறிப்பிட முடியும். இதன்படி ஆன்மா அழிவற்றதாகும். உடல் அழிவடைந்த பின்னர் குறித்த ஆன்மா மேற்கொண்ட செயல்களுக்கு இணங்க அது மறு பிறப்பு எடுக்கின்றது. இதன்படி உடல் என்பது தவறுகள் செய்த ஆன்மா அத்தவறுகளை திருத்திக்கொள்வதற்கான சிறைக்கூடமாகவே உள்ளது. இத்தகைய தனித்த சிறைக்கூடங்கள் மிகப்பெரிய சிறையான உலகில் உலவிக்கொண்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள தண்டனையினை ஏற்று அதனை நிறைவேற்றி முடிப்பதே இந்த சிறையில் இருந்து வெளியேறுவதற்கான வழியாகும். இவ்வாறு ஒவ்வொரு ஆன்மாவும் மறு பிறப்பு எடுக்கும்போது அது மனிதராகவோ அல்லது வேறு உயிரினமாகவோ பிறக்கலாம். இதன் காரணமாக பிற உயிரிகளை துன்பத்துக்கு உள்ளாக்குவதோ அல்லது உணவுக்காக கொலை செய்வதோ கூடாது. இவ்வாறு துன்பத்துக்கு உள்ளாக்கப்படுவது, அல்லது உணவுக்காக கொல்லப்படுவது முன்பிறவியில் உங்களுடைய நெருங்கிய உறவினராக அல்லது நண்பராக இருக்கலாம். உங்களது செயலினால் அவரது ஆன்மா மீண்டும் துன்பத்தை அனுபவிக்க நேரிடுகின்றது. ஆனால் உங்களது இயலாமையின் காரணமாக நீங்கள் அதனை அறியமுடிவதில்லை. எனவே அத்தகைய செயற்பாடுகளில் இருந்து விலகியிருங்கள். தாவர உணவுகளை உண்பது மிகவும் சிறப்பான ஒன்றாகும். இது ஆன்மாவிற்கும் உடலிற்கும் மிகவும் ஏற்புடையதாகும் (Waterfield, 2008, & Burnet, 1920) என்று குறிப்பிடுகின்றார்.

அதுபோல இசையும் ஆன்மாவை தூய்மையாக்குவதற்கு உகந்ததாகும். இதன்படி காலையில் சூரிய உதயத்தின்போதும், உறக்கத்திற்கு செல்வதற்கு முன்பும் இசையுடன் கூடிய பாடல்களைப்பாடி பிரார்த்தனைகளை மேற்கொண்டு மனதை இதமாக பேணிக்கொள்ளும் செயற்பாடுகளை கடைப்பிடித்ததாக குறிப்பிடப்படுகின்றது. இதன்படி இசை சோகத்தை மறப்பதற்கும், கோபத்தை குறைத்து இல்லாமல் செய்வதற்கும், ஆசையினை துறப்பதற்கும் ஒரு கருவியாக

உடல் உள சிகிச்சை முறையாக (Psycho-Physical Therapy) பயன்படுத்தப்பட்டது. இவற்றுடன் இசைக்கு குழுவான சேர்ந்து நடனமாடுதல், நடைப்பயிற்சியினை மேற்கொள்தல் என்பனவும் சிறந்த வாழ்க்கை முறையின் கூறுகளாக பின்பற்றப்பட்டன. இவ்வாறு நடைப்பயிற்சியினை முடித்துக்கொண்டபின்னர் அமைதியான இடத்தில் ஒன்றாக சேர்ந்து கலந்துரையாடுதல், அறிவுரைகளை பகிர்ந்துகொள்ளுதல், கடினமற்ற உடற்பயிற்சிகளை மேற்கொள்ளதல் முதலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவை அனைத்தும் உடலையும், உள்ளத்தையும், ஆன்மாவையும் சமநிலையில் வைத்து நல்ல வாழ்க்கையினை வாழ்வதற்கான அடிப்படைகளாக பின்பற்றப்பட்டன. இவற்றின் பிற்கால தாக்கங்களைப் பொறுத்தவரையில் சோக்கிரடீசின் இறுதி நாட்களில் பைதகரசிய சிந்தனையாளர்கள் அவருடன் கூட இருந்ததாக குறிப்புக்களை பிளேட்டோவின் Phaedo நூலில் காண முடிகின்றது. இதில் ஆன்மா தொடர்பாக சோக்கிரடீஸ் முன்வைக்கும் கருத்துக்கள் பைதகரசிய சிந்தனைகளின் தாக்கங்களுக்கு உற்பட்டதாகும். எவ்வாறாயினும் ஏற்கனவே பைதகரசின் சிந்தனைகளுடன் தொடர்புடையவராக இருந்த பிளேட்டோ சோக்கிரடீஸ் என்ற பாத்திரத்தின் ஊடாக தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார் என்று கருதுவதற்கும் இடம் உள்ளது (Batchelor, 2008, & Hermann, 2004).

பைதகரசிய வாழ்க்கை முறையை பின்பற்றியவர்களுடைய உணவுப் பழக்கவழக்கங்கள் மிகவும் கண்டிப்பானவையாக இருந்தன. குறைந்தளவான, ஆரோக்கியமான, சக்திமிக்க உணவுகள் எடுத்துக்கொள்வது பின்பற்றப்பட்டது. இவற்றில் தாவர உணவு, தெரிவு செய்யப்பட்ட தானியவகைககள், கோதுமை, மில்லட் என்பவை பிரதானம் பெற்றிருந்தன. ஒவ்வொரு நாளும் காலையிலும், நித்திரைக்கு செல்வதற்கு முன்பும் இரண்டு தடவைகள் சுய பிரதிபலிப்பு செய்துகொள்வது (Self Reflection) அவசியமான நடைமுறையாக இருந்தது. இதன்படி குறித்தநாள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது, என்ன விடயங்கள் சரியாக அமைந்திருந்தன, என்ன விடயங்கள் எதிர்பார்த்தபடி அமையவில்லை, எவ்வாறான மாற்று ஏற்பாடுகள் செய்யவேண்டும், செய்து முடிப்பதற்கு உள்ள வேலைகள் என்ன என்பன உள்ளிட்ட விடயங்கள் இந்த செயற்பாட்டின்போது சுய பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டன. இந்த சிந்தனைகள், வாழ்க்கை முறைகள் என்பன புராதன கிரேக்கத்தில் பின்பற்றப்பட்ட ஓர்பிசம் (Orphism) சமயக்கொள்கையின் மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் என்று குறிப்பிடப்படுகின்றது (Riedweg, 2002: 34, & Melone, 2009: 29).

பைதகரசிய சிந்தனைகளில் பக்தி, ஞானம், நீதி, நிதானம், தைரியம் என்ற ஒழுங்கில் ஒழுக்கத்துடன் தொடர்புடைய விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன. நீதி என்பது 'ஒன்றினைந்து வாழ்கின்ற சமூகம், அதில் அனைவரும் சமமானவர்கள், அனைத்தும் பொதுவானவை' என்ற உணர்வினை அடிப்படையாகக் கொண்டு பிறப்பதாக குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய ஒழுக்க சிந்தனைகளை உள்ளடக்கிய நல்வாழ்க்கைக்கான வழிகாட்டல்களாக அமைந்த இவருடைய போதனைகள் எழுபத்து ஒரு தனித்தனி வசனங்களாக Golden Verses of Pythagoras என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றினை பின்வருமாறு சாராம்சப்படுத்த முடியும்.

1. நியாயப்பிரமாணத்தினால் நிலைநிறுத்தப்பட்டுள்ள அழிவற்ற கடவுளை வணங்குவதனை உறுதி செய்துகொள்ளுங்கள். வழங்கிய வாக்குறுதி, உங்களுக்காக செயற்பட்டவர்கள், நன்மை என்பவற்றினை எப்போதும் மிகுந்த மரியாதைக்குரியதாக போற்றுங்கள். மனிதர்களுக்கும் கடவுள்களுக்கும் இடையில் இருக்கக்கூடிய புவிசார்ந்த தெய்வீக சக்திகளுக்கு உரிய மரியாதையினை கொடுங்கள். உங்களுடைய பெற்றோரையும், உறவினரையும், தொடர்புடையவர்களையும் எப்போதும் கௌரவியுங்கள்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

2. மனிதர்களுல் மற்ற அனைவரையும் விட நல் ஒழுக்கத்தினால் தன்னை வேறுபடுத்தி நிலைநிறுத்துகின்றவரை உங்களுடைய நண்பராக்கிக்கொள்ளுங்கள். அவருடைய அறிவுரைகளுக்கு எப்போதும் செவிசாயுங்கள், அவருடைய நல்லொழுக்கமுள்ள பயனுள்ள செயல்களில் இருந்து எடுத்துக்காட்டுக்களை பெற்று கற்றுக்கொள்ளுங்கள். சிறிய சிறிய தவறுகளுக்காக உங்களுடைய நண்பர்களை வெறுப்பதனை முடிந்தவரையில் தவிர்த்துக்கொள்ளுங்கள்

3. பின்வரும் உணர்வுகளை பூரணமாக வெற்றிகொண்டு அவற்றினை இல்லாது செய்வதற்கு உங்களை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள. முதலாவதாக அதீதமாக உணவு, சிற்றின்பம், சோம்பல், கோபம். மற்றவர்கள் முன்நிலையிலோ அல்லது தனியாக இருக்கும்போதோ எந்தவொரு தீமையினையும் செய்யாதீர்கள். ஆனால், அனைத்திற்கும் மேலாக உங்களை மதியுங்கள். உங்களுடைய செயல்களிலும், உங்களுடைய வார்த்தைகளிலும் நீதி இருப்பதனை உறுதி செய்துகொள்ளுங்கள். எந்தவொரு விடயத்தையும் விதிமுறையின்றியோ, காரணமின்றியோ செய்வதற்கு உங்களை பழக்கப்படுத்திக் கொள்ளாதீர்கள்

4. அனைத்து மனிதர்களுக்கும் இறப்பு உள்ளது என்பதனை எப்போதும் சுயபிரதிபலிப்புக்குள் உள்வாங்கிக்கொள்ளுங்கள்

5. அதிர்ஸ்டத்தினால் பெறப்பட்ட விடயங்கள் நிச்சயமற்றவை, அவை பெறப்பட்டதனைப்போலவே இழக்கப்பட்டிருக்கவும் முடியும்

6. மனிதர்களிடையே அவர்களுடைய நல்ல மற்றும் கெட்ட செயல்கள் தொடர்பாக நல்ல காரணங்களைக் கொண்டுள்ளனர். அவற்றினை மிகவும் எளிதாக போற்றி பாராட்டாதீர்கள் அதேவேளை நிராகரிக்கவும் செய்யாதீர்கள். ஆனால் பொய்கள் அதிகளவில் இருந்தால் அதனைப்பற்றி இதமாக கேளுங்கள், உங்களை பொறுமையுடன் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள். எந்தவொரு மனிதனும் தன்னுடைய செயல்களினாலோ அல்லது வார்த்தைகளினாலே உங்களை கவர்ந்துகொள்வதற்கு இடம் வழங்காதீர்கள். அதுபோல உங்களுக்கு இலாபமில்லாத ஒன்றினை சொல்வதற்கோ அல்லது செய்வதற்கோ இடம் வழங்காதீர்கள், நீங்கள் எந்தவொரு செயலினையும் முட்டாள்தனமாக செய்யவில்லை என்பதற்கான அனைத்தையும் ஆராய்ந்து கவனமாக செயற்படுங்கள். ஏனென்றால் முன்யோசனை இல்லாமல் கதைப்பதும், செயற்படுவதும் பரிதாபகரமான மனிதர்கள் செய்கின்ற செயற்பாடுகளேயாகும். செய்த பின்னர் உங்களை பாதிக்காத செயல்களையே செய்யுங்கள், ஆனால் செய்த தவறுகளை எப்போதும் ஒத்துக்கொண்டு பிராயச்சித்தம் தேடுங்கள்

7. நீங்கள் தெளிவாக, சரியாக புரிந்துகொள்ளாத எதனையும் ஒருபோதும் செய்யாதீர்கள்

8. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் தெளிவாக கற்றுக்கொள்ளுங்கள், இதன்மூலம் நீங்கள் மிகவும் இனிமையான வாழ்க்கையை நடாத்துவீர்கள்

9. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்களது உடல் சுகாதாரத்தை புறக்கணித்து செயற்படாதீர்கள். இதன்பொருட்டு தேவையான அளவு நீரையும் உணவையும் கொடுங்கள் போதுமான அளவு உடற்பயிற்சியினையும் மேற்கொள்ளுங்கள்

10. ஆடம்பரங்களுக்கு இடம்கொடுக்காமல் சுத்தமாகவும், ஒழுக்கமாகவும் வாழ்வதற்குரிய பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்

11. உங்களை எந்தவகையிலும் பாதிப்புக்கு உள்ளாக்காத செயற்பாடுகளை செய்யுங்கள், அவற்றை செய்வதற்கு முன்னர் சரியாக சீர்தூக்கிப்பார்த்துக்கொள்ளுங்கள்

12. நீங்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் அன்றைய நாளில் நீங்கள் செய்த, சிந்தித்த சரியான மற்றும் தவறான விடயங்கள் பற்றி மீள்பரிசீலனை செய்யாமல் உறக்கத்திற்காக கண்களை மூடாதீர்கள். நீங்கள் தவறான விடயங்கள் செய்திருப்பின் அதற்காக உங்களை கண்டித்துக்கொள்வதற்கு தவறாதீர்கள்.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

அதுபோல செய்த நல்ல செயற்பாடுகளுக்காக உங்களை நீங்களே மனதளவில் மகிழ்சிப்படுத்திக்கொள்ளுங்கள்

13. நீங்கள் எந்தவொரு காரியத்தையும் செய்வதற்கு ஆரம்பிப்பதற்கு முன்னர் அது மிகச்சரியாக செய்து முடிக்கப்பட வேண்டும் என்பதற்காக கடவுள்களை வேண்டிக்கொள்வதற்கு தவறாதீர்கள். இவ்விடயத்தினை நீங்கள் பழக்கமாக்கிக்கொள்கின்றபோது இறப்பற்ற கடவுளின் ஆற்றலினை, அவரின் செயற்படுவிதத்தினை, மனிதர்கள் மற்றும் கடவுளின் அதிகாரத்தின் நீட்சியினையும், அவை எவ்வாறு இணைந்து செயற்படுகின்றன என்பதனையும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். மேலும் இந்த பிரபஞ்சம் குறிப்பிட்ட வகையான ஒரு ஒழுங்கின் கீழ் இயங்கிக்கொண்டுள்ளது என்பதனை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

14. இத்தகைய அறிகையினை நீங்கள் பெற்ற பின்னர், நீங்கள் எதற்கு நம்பிக்கை கொள்ளக்கூடாதோ அதனை பெற்றுக்கொள்வதற்கு நம்பிக்கை கொள்ள மாட்டீர்கள் அதுபோல இந்த உலகில் உங்களுக்கு கிடைக்க வேண்டியது எதுவும் உங்களிடம் இருந்து எந்த வகையிலும் மறைக்கப்பட்டிருக்க முடியாது.

15. இந்த புவியில் மனித ஆன்மா மிகவும் புனிதமானது. அதனை மேலும் புனிதமாக்கி இலட்சியத்தை அடைந்துகொள்வது அவசியமானது. இறைச்சி உண்பதில் இருந்து முற்றிலும் விலகியிருப்பதது இதில் மிகவும் முதன்மையானதாகும்.

16. இவ்வாறு ஆன்மாவை புனிதமாக்கி உயர்வானவராக மாறுகின்றபோது நீங்கள் இறப்பற்ற கடவுளுக்கு நிகரானவராகின்றீர்கள். இறப்பு என்பது உங்களுக்கு துன்பத்துக்குரிய ஒரு விடயம் அல்ல (Olivet, 1917, Laertius,1925, & Johansen, 2005).

இத்தகைய அடிப்படையில் உணவுப்பழக்க வழக்கங்கள், பொருத்தமான உடற்பயிற்சிகள், உளமேம்பாட்டிற்கான பயிற்சிகள், தூய்மைப்படுத்துவதற்காகவும், பேணுவதற்குமான ஆன்மீக பயிற்சிகள், ஒன்றினைந்த சமூக வாழ்க்கை என்பவற்றினை பின்பற்றிய வகையில் சோக்கிரடீசிற்கு முந்திய தத்துவவியலாளர்களில் மனித ஆன்ம விடுதலை, நல்வாழ்க்கை முதலான எண்ணக்கருக்கனை அடிப்படையாகக் கொண்டு இவ்வுலக வாழ்க்கையிலும், இறப்பின் பின்னரும் நற்பேறு பெறுவதற்கான வழிகாட்டல்களை வழங்கிய ஒரு பங்களிப்பாளராக பைதகரசினை அறிந்துகொள்ள முடிகின்றது.

பைதகரசிய சமூகத்தின் செயற்பாடுகள்

பைதகரஸ் இத்தாலியின் குறோடன் எனும் நகரத்தில் மேற்குரித்த வகையில் அமைந்துள்ள தன்னுடைய கொள்கைகளை பின்பற்றி செயற்படுகின்ற ஒரு சமூகத்தை உருவாக்கியிருந்தார். மிகவும் இருக்கமான சகோதரத்துவம், பரஸ்பரம் உதவுகின்ற தன்மை, சமத்துவம், உடைமைகளைப் பேணாமை முதலானவை இங்கு முக்கியத்துவம் பெற்றவையாக இருந்துள்ளன. பைதகரசும், அவரை பின்பற்றியவர்களும் இங்கு ஒன்றாக வளங்களை பொதுவாக பகிர்ந்துகொண்டும், கடுமையான நடத்தை விதிகளை பின்பற்றியும் வாழ்ந்துள்ளனர். இவ்வாறு ஒன்றினைந்த சமூகத்தில் வாழ்வதே தனிப்பட்ட மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு பங்களிப்பு செய்யும் என்பது அவருடைய நம்பிக்கையாக இருந்துள்ளது. இவர்கள் சமத்துவம், நீதி என்பவற்றிற்கு முதன்மையான இடம் வழங்கியதுடன் தொடர் சந்திப்புக்களில் தத்துவார்த்த கலந்துரையாடல்களை மேற்கொண்டு அறிவை பகிர்ந்து கொண்டதுடன், ஒவ்வொருவருடைய தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் உதவிகளை செய்பவர்களாக வாழ்ந்தார்கள். குறிப்பாக பெண்கள் இந்த சமூகவாழ்க்கையில் சமத்துவமான இடத்தினைப் பெற்றிருந்தனர். இந்த சமத்துவத்தை பேணுவதற்கான கிரியைகளும், அனுஸ்டானங்களும் பயிற்சிகளாக மேற்கொள்ளப்பட்டதாக அறியக்கூடியதாக உள்ளது (Luchte, 2011).

அண்டத்தையும், அதில் தனிமனிதர்களது இடத்தையும் புரிந்துகொள்வதற்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இந்த சமூகத்தில் தொடர்ச்சியாக

© 2024, IRJTSR

இடம்பெற்றுள்ளன. இசை, கணிதம், வானியல், மெய்யியல், உடற்பயிற்சி, உணவுப்பழக்கவழங்கங்கள் முதலானவை இங்கு மிகுந்த கவனத்திற்குரியவையாக இருந்துள்ளன. கற்றலின் ஊடாக ஞானத்தெளிவு பெற்றவர்களே அவற்றினை நடைமுறையில் பிரயோகிக்கின்றபோது மேன்மையான வாழ்க்கையினை வாழ முடியும் என்பது இவர்களது நிலைப்பாடாக இருந்துள்ளது. இசை மனிதர்கள் உள்ளார்ந்த மன அமைதியுடன் வாழ்வதற்குரிய இயலுமையினை ஏற்படுத்துகின்றது என்ற அடிப்படையில் எண்ணிக்கையின் விகிதாசாரங்களின் அடிப்படையில் இசையை கற்றுக்கொண்டு செயற்பட்டனர் (Barnes, 2002). இயற்கை உலகினை எண்களின் அடிப்படையில் விளங்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையினைக் கொண்டிருந்த இவர்கள் கணிதம் இந்த பிரபஞ்சத்தின் தெய்வீக கட்டமைப்பினை புரிந்துகொள்வதற்குரிய இயலுமையினை வழங்கின்றது என்பதனை வலியுறுத்துகின்றனர். பைதகரசின் தேற்றம் கணிதவியலில் இவர் மேற்கொண்ட மிக முக்கியமான பங்களிப்பாக உள்ளது. மெய்யியலை ஒரு நடைமுறைப் பயிற்சி என்று அணுகிய இவர்கள் தத்துவார்த்த கலந்துரையாடல்கள், விவாதங்கள், பிரதிபலிப்புக்கள் என்பவற்றின் ஊடாக ஒழுக்கவியல் கொள்கைகளை புரிந்துகொள்வதற்கும், நாளாந்த வாழ்க்கையில் அவற்றை பிரயோகிப்பதற்குமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஆன்மாவின் நிலையான தன்மை, மறுபிறப்பு என்பவற்றில் நம்பிக்கை கொண்டிருந்த பைதகரசிய வாதிகள் உடல் தூய்மையுடன் ஆன்மாவை தூய்மைப்படுத்துவதற்குரிய பயிற்சிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்தனர். இதன்பொருட்டான ஆன்மீக கிரியைகள், அனுஸ்டானங்கள், தியானப்பயிற்சி என்பன ஒருங்கினைந்த சமூக வாழ்க்கையின் பிரதானமான அம்சங்களாக அமைந்திருந்தன. பைதகரசின் இந்த சமூக வாழ்க்கைமுறை தொடர்பான அறிமுகத்தை பிளேட்டோ அவருடைய ஆசிரியர் சோக்கிரடீசின் இறப்பின் பின்னர் எதென்சில் இருந்து வெளியேறி மேற்கொண்ட சுற்றுப்பிரயாணங்களின்போது இத்தாலிக்கு சென்றபோது அறிந்துகொண்டிருந்தார் என்பதனை அவருடைய நூல்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது (Burnet, 1920, & Kenny, 2004).

பைதகரசிய சிந்தனையின் செல்வாக்கு

பைதகரசின் சிந்தனைகள் பிற்கால மெய்யியலாளர்களில் மிகுந்த செல்வாக்குடையதாக இருந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக பிளேட்டோ, நவபிளேட்டோனிய வாதிகள் அதிகம் பைதகரசிய தத்துவத்தை உள்வாங்கியவர்களாக தங்களது மெய்யியலை விருத்தி செய்துள்ளனர். சோக்கிரடீசின் மிகவும் பிரதான மாணவரான பிளேட்டோ தன்னுடைய சுற்றுப்பயணங்களின்போது சிலித்தீவில் பைதகரசியவாதிகளுடன் இடைத்தொடர்புகளை மேற்கொண்டிருந்தாக அறியப்படுகின்றது. பிளேட்டோவின் குடியரசு, திமோஸ் ஆகிய நூல்களில் சமூக நல்லிணக்கத்திற்காக முன்வைக்கப்பட்டிருக்கும் சமூக அமைப்பு முறை பைதகரஸ் ஏற்கனவே வாழ்ந்து காட்டிய சமூகத்தின் விரிவாக்கமே என்று அறியப்படுகின்றது. மேலும் சோக்கிரடீசின் இறுதி நாட்களில் அவர் இரண்டு பைதகரசியவாதிகளுடன் உரையாடுவதாக எழுதப்பட்டுள்ள Phயநனழ நூல் அவர் எவ்வளவு தூரம் பைதகரசிய சிந்தனைகளாக ஆன்மா, மறுபிறப்பு என்ற விடயங்களை உள்வாங்கிக்கொண்டிருந்தார் என்பதனை வெளிப்படுத்துகின்றன. பைதகரசிய, பிளேட்டோனிய சிந்தனைகளை ஒன்றினைத்து செயற்பட்ட நவபிளேட்டோனியம் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் புளோடினஸ் என்பவரினால் உருவாக்கப்பட்டதாகும். இதில் பைதகரசிய பௌதீகஅதீத சிந்தனைகள் உள்வாங்கப்பட்டு ஆன்மாவை தூய்மைப்படுத்துவதன் ஊடாக ஒவ்வொரு மறுபிறப்பிலும் அதனை மேன்மைப்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புக்கள் தொடர்பிலான தேடல்களை மேற்கொள்ளப்பட்டுள்ளன (Raven, & Kirk, 1957).

சமகாலத்தில் ஒன்றினைந்த நல்வாழ்க்கையினை விருத்தி செய்வதற்கான முறைகளில் பைதகரசிய வழிகாட்டல்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. பௌதீக, ஆன்ம, ஆன்மீக, உளரீதியான விடயங்களை ஒன்றினைத்து இணக்கமான வாழ்க்கையை வாழ்வதற்கான வழிகாட்டல்கள் இதன் ஊடாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட சுயமுன்னேற்றத்தை வலியுறுத்திய வகையில் சுய-கட்டுப்பாடு, நடுநிலையான செயற்பாடுகள், அறிவுத்தேடல்கள் என்பன வலியுறுத்தப்படுகின்றன. மனநிறைவான செயற்பாடுகள், தியானம், யோகப்பயிற்சி முதலானவை உள்ளார்ந்த அமைதி, உளச்சமநிலை என்ற பைதகரசிய வழிகாட்டல்களை இலக்காகக் கொண்டவையாகவே உள்ளன. தனிப்பட்ட வகையில் பிரபஞ்சத்தையும், சுயத்தையும் அறிந்துகொள்வதே நிறைவான வாழ்க்கைக்கு வாய்ப்பினை வழங்குகின்றது என்ற பைதகரசிய வழிகாட்டல்கள் சமகாலத்தில் மிகுந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன. மேலும் ஒன்றினைந்த சமூகத்தில் இணக்கமாக வாழ்தல் என்ற பைதகரசிய வழிகாட்டல்கள் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் அதன் அடிப்படையான அம்சங்கள் தெளிவாக புரிந்துகொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளை அவதானிக்க முடிகின்றது. தனிநபர்கள் சமூகத்துடன் தங்களை இணைத்துக்கொள்ளுதல், பொதுச்சேவையினை மேற்கொள்ளுதல், பிரதிபலன்களை எதிர்பாராது சமூகத்துக்கான ஆக்கபூர்வமான பணிகளை நிறைவேற்றுதல் என இவை நவீன சமூகத்தில் விரிவடைந்து செல்கின்றன (Malone, 2009).

முடிவுரை

இந்த கட்டுரையின் ஊடாக பைதகரசிய மெய்யியலின் பன்முகத்தன்மை, அதன் நடைமுறைத்தன்மை, காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கும் தன்மை என்பன கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இயற்கை ஒரு ஒழுங்கமைப்பில் உள்ளது, அதனை புரிந்துகொண்டு இணக்கமாக வாழ்வதன் ஊடாக மனிதர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்க்கையில் நல்லவகையில் வாழ்ந்து முடிக்க முடியும் என்ற வழிகாட்டல் இங்கு சிறப்பான ஒன்றாக உள்ளது. ஆன்மா, மறுபிறப்பு என்ற பௌதீகஅதீத சிந்தனைகளை உள்ளடக்கி அவற்றினை ஒழுக்கவியலுடன் இணைத்து நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றுவதற்குரிய விடயங்களை முன்வைத்துள்ள வகையில் இந்த மெய்யியல் வழிகாட்டல்கள் சிறப்பான கவனத்திற்குரியவையாக உள்ளன. இயற்கையுடன் இசைந்த எளிமையான வாழ்க்கை, ஒழுக்கத்தின் முக்கியத்துவம், உணவுப்பழக்கவழக்கங்கள், உடற்பயிற்சி, தியானம், சுய-பிரதிபலிப்புச் செய்தல் என அமையும் இந்த நுட்பங்கள் எந்த காலத்திலும் பிரயோகத்தன்மை கொண்டவையாகவே உள்ளன. குறிப்பாக நவீன சமூகங்களில் ஒரு சமநிலையான, அர்த்தமுடைய வாழ்க்கையை வாழ விரும்புகின்ற மனிதர்களுக்கு இந்த கொள்கைகள் மிகுந்த பயனுடையவையாக உள்ளன. விரைவான தொழிநுட்ப முன்னேற்றங்கள், அதிகரித்து வரும் குழப்பமான வாழ்க்கை முறைகள் என்ற சிக்கல்களில் இருந்து விடுபட்டு நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு இவை காலங்களை கடந்த வழிகாட்டலை முன்வைப்பவையாக உள்ளன. பைதகரசின் முன்வைப்புக்கள் உடல், உள, ஆன்மீக பரிமாணங்களை ஒன்றினைக்கின்றது, நவீன யுகத்தின் முழுமையான சுகாதார நடைமுறைகளுடன் இசைவானதாக அமைந்து மனிதனை உயர்நிலைப்படுத்துவதாக உள்ளது. மனித வாழ்க்கையில் உடல், உள ஆரோக்கியத்திற்கும் ஆன்ம முன்னேற்றத்திற்குமான அம்சங்களை உள்ளடக்கியுள்ள வகையில் சமகாலத்திலும் மிகவும் பிரயோகப்பயன்பாடுடையதாகவே புராதனமானதும், முதாலாவதுமான 'வாழும் கலை' முறையாக விருத்தி செய்யப்பட்டுள்ள பைதகரசிய மெய்யியல் உள்ளமை சிறப்பான ஒன்றேயாகும்.

சான்றாதாரங்கள்

[1] Barnes, J. (1982). *The Pre Socratic-Philosophers.* USA: Routledge Publications

© 2024, IRJTSR

[2] Barnes, J. (2002). *Early Greek Philosophy*. England: Penguin Books

[3] Batchelor, S. (2008). *Ancient Greeks for Dummies.* England: Jahn Wiley & Sons, Lts

[4] Burnet, J. (1920). *Early Greek Philosophy*. England: Elibron Classics

[5] Gill, A. L., & Pellegrin, P. (2006). *Blackwell Companions to Ancient Philosophy*. USA: Blackwell Publishing

[6] Gottlieb, A. (2016). *The Dream of Reason – A History of Western Philosophy from the Greek to the Renaissance.* England: W. W. Norton & Company

[7] Hermann, A. (2004). *To Think Life God – Pythagoras and Parmenides the Origin of Philosophy.* USA: Parmenides Publishing

[8] Johansen, K, F. (2005). *A History of Ancient Philosophy – From the Beginnings to Augustine.* USA: Routledge Publications

[9] Kenny, A. (2004). *Ancient Philosophy*. USA: Oxford University Press

[10] Laertius, D. (1925). *Lives of Eminent Philosophers – Volume II*. G.P.Putnam's Sons UK

[11] Luchte, J. (2011). *Early Greek Thought – Before the Dawn.* USA: Continuum

[12] Malone, J. C. (2009). *Psychology – Pythagoras to Present.* England: A Bradford Book Publications

[13] Olivet, F. (1917). *The Golden Verses of Pythagoras.* England: G. P. Putnam's Sons

[14] Raven, J. E, & Kirk, G, S. (1957). *The Pre Socratic-Philosophers – A Critical History with a Selection of Texts.* USA: Cambridge University Press

[15] Waterfield, R. (2000). *The First Philosophers - the Pre-Socratic and Sophist*. USA: Oxford University Press

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்